பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 129

வெள்ளிக்கிழமை
04 ஏப்ரல் 2025

பங்குனி 21 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## புலமைப்பரிசில் ஓகஸ்ட் 10இல்

கொழும்பு, ஏப். 4
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதி நடைபெறும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். 11

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில்

# நிராகரித்த மனுக்கள் மீதான வழக்குகள் இன்று தள்ளுபடி?

**கொழும்பு, ஏப்ரல் 4**

**உள்ளூராட்சித் தேர்தலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்படவே சாத்தியங்கள் உள்ளனவென சட்டவல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.** 11

## இலங்கை மீது 44 வீத வரி

அமெரிக்கா அறிவிப்பு

கொழும்பு, ஏப். 4
இலங்கையில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு 44 வீத வரியை விதிப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.
அமெரிக்காவின் வரிவிதிப்புக் 12

## அமெரிக்காவின் வரி; ஆராயத் தனிக்குழு!

ஜனாதிபதி அநுர நடவடிக்கை



கொழும்பு, ஏப். 4
அமெரிக்காவால் இலங்கைக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள பரஸ்பர வரிகள் தொடர்பில் ஆராய்வதற்கும், அந்தப்பிரச்சினைகள் தொடர்பில் காத்திர 11

தையிட்டி திஸ்ஸ விகாரை

## அரசின் நடவடிக்கையில் ஏமாற்றம்தான் எஞ்சியது

காணிகளை இழந்தோர் காட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 4
தையிட்டி திஸ்ஸ விகாரைப் பிரச்சினைக்குத் தீர்வைத் தருவதாகக் கூறி, அரசாங்கத்தாலும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான சபையாலும் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலில் ஏமாற்றமே மிஞ்சியது என்று காணிகளை இழந்த உறவினர்கள் தெரிவித்துள்ளனர். 11

## தீர்வு தருவதற்காக வந்து தெறித்தோடிய அமைச்சர்



யாழ்ப்பாணம், ஏப். 4
தையிட்டி திஸ்ஸ விகாரை தொடர்பில் ஏற்பட்டிருக்கும் முரண்பாடுகளுக்குத் தீர்வைத் தருவதாகக் கூறி நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்ட நீதியமைச்சர் ஹர்சன நாணயக்கார, வெறும் பத்து நிமிடங்கள் வரையே 11

இராணுவத்தின் பிடியிலிருந்த

## பரந்தன் தொழிற்சாலையின் 15 ஏக்கர் காணி விடுவிப்பு

கிளிநொச்சி, ஏப். 4
பரந்தன் இரசாயனத் தொழிற்சாலைக்குச் சொந்தமான காணிகள் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த நிலையில், அந்தக் 11

## தீர்வு தர வந்தோர் காணிகேட்ட கதை

குழப்பியடித்தது பௌத்த அமைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 4
தையிட்டி திஸ்ஸவிகாரை விவகாரத்தில், பாதிக்கப்பட்ட மக்களின் காணிகளுக்குத் தீர்வுகாண்பதற்காக இடம்பெற்ற கலந்துரையாடலில், சிங்கள மக்களுக்குக் காணி கேட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது. நாகவிகாரையில் நேற்று மாலை 11

நீதியமைச்சால் நேற்று

## பெறப்பட்டன ஆவணங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 4
திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்டுள்ள காணிகளின் உரிமையாளர்களிடம் இருந்து, நீதியமைச்சால் நேற்று ஆவணங்கள் பெறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
தையிட்டி - திஸ்ஸ விகாரை விடயத்தில் 12

## இலங்கையுடனான உறவை வலுப்படுத்துவதற்கு ஆர்வம்

பிரதமர் மோடி தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 4
இலங்கையுடனான உறவை மேலும் வலுப்படுத்துவதில் ஆர்வமாக உள்ளதாக இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.
பிரதமர் மோடி இன்றுமுதல் எதிர்வரும் 6ஆம் திகதிவரை இலங்கைக் 11



முச்சந்தி முனி

## 'பனையால விழுந்த இலங்கையை ட்ரம்பும் ஏறி மிதிக்கிறார் கண்டியளோ'

திஸ்ஸ விகாரை விவகாரம்

## தொடர்புடைய திணைக்களங்களுக்கு அழைப்பில்லாமல் கலந்துரையாடல்!

மாவட்டச் செயலரும் அழைக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், ஏப். 4
யாழ்ப்பாணம் தையிட்டி திஸ்ஸ விகாரை விடயத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல்களுக்கு தொடர்புடைய திணைக்களங்கள் எவற்றுக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை என்று தெரியவருகின்றது.
குறித்த விகாரை தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கும், தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் திணைக்களப் 11

கச்சதீவு மீட்பு

## தேர்தல் நாடகமே

அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 4
கச்சதீவு இலங்கைக்கே சொந்தமானது. இது சர்வதேசத்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, வாக்கு வேட்டைக்காக தமிழக சட்டசபையில் நிறைவேற்றப் 11

## 13ஐ தருவதற்காக வரவில்லை மோடி!



அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 4
பிரதமர் மோடியின் வருகை 13ஆவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல என்று அமைச் 11

## வவுனியாவில் கஞ்சா மீட்பு!

மூவர் கைது 11



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத |
|---|---|---|---|---|---|---|
| திகதி 03.04.2025 | திகதி 03.04.2025 | திகதி 03.04.2025 | திகதி 03.03.2025 | திகதி 03.04.2025 | திகதி 03.04.2025 | திகதி 03.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4037 | சீட்டிழுப்பு இலக்கம் 1104 | சீட்டிழுப்பு இலக்கம் 0063 | சீட்டிழுப்பு இலக்கம் 2143 | சீட்டிழுப்பு இலக்கம் 5795 | சீட்டிழுப்பு இலக்கம் 1825 | சீட்டிழுப்பு இலக்கம் 0370 |
| ஆங்கில எழுத்து W | வெற்றி இலக்கினம் விருச்சிகம் | ஆங்கில எழுத்து R | ஆங்கில எழுத்து E | ஆங்கில எழுத்து W | ஆங்கில எழுத்து B | ஆங்கில எழுத்து W |
| வெற்றி இலக்கங்கள் 22 24 60 67 | வெற்றி இலக்கங்கள் 03 33 40 43 | வெற்றி இலக்கங்கள் 4 4 4 3 | சுப்பர் இலக்கம் 25 | வெற்றி இலக்கங்கள் 2 5 3 4 8 9 | வெற்றி இலக்கங்கள் 14 22 34 61 | வெற்றி இலக்கங்கள் 3 4 8 9 |
| விசேட எழுத்து W | | | வெற்றி இலக்கங்கள் 25 50 67 76 | | விசேட எழுத்து B | |

# சமஷ்டி அதிகாரப்பகிர்வை மோடி வலியுறுத்தவேண்டும்

## வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு மனு கையளிப்பு

**யாழ்ப்பாணம், ஏப். 4**

**ஈழத்தமிழ் மக்களின் வாழும் உரிமை இதுவரை உறுதிசெய்யப்படாத நிலையில், வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப்பகிர்வை ஏற்படுத்த இலங்கை அரசாங்கத்துக்கு இந்திய அரசாங்கம் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு வலியுறுத்தியுள்ளது.**

இலங்கைக்கு இன்றையதினம் இந்தியப் பிரதமர் மோடி வருகை தரும் நிலையில் யாழ்.இந்தியத் துணைத்தூதரகத்தில் மனுவொன்றைக் கையளித்து இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் ஜோன்சன் பிகிறாடோ தெரிவிக்கையில்,

ஒரு நட்பான அயல்நாடு எனும் வகையில் இலங்கையின் நெருக்கடி காலங்களில் இந்தியா எப்போதும் உதவிக்கு வருகின்றது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்மூலம் இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புக்கு அறிமுகப்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டமானது குறிப்பிட்ட சில உரிமைகளை இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சார்ந்த தமிழ் பேசும் மக்களுக்கும் ஒட்டுமொத்த இலங்கைக்கும் உறுதிப்படுத்தியுள்ளது.

13 ஆவது திருத்தச்சட்டம் இலங்கையின் அரசியல் அமைப்பில் உள்வாங்கப்பட்டு 35 வருடங்கள் கடந்துவிட்டன.

தொடர்ந்து ஆட்சிக்கு வந்த அரசுகள் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப்பகிர்வை உறுதிப்படுத்தாததுடன் இராணுவமயமாக்கலையும், சிங்கள காலணித்துவத்தையும், பௌத்தமயமாக்கலையும் விரிவாக்கியுள்ளன.

எனவே, வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சார்ந்த தமிழ் பேசும் மக்களுக்கு சமஷ்டி முறையிலான அதிகாரப்பகிர்வு முறையே கௌரவமான உரிமைகளுடன் கூடிய வாழ்வை உறுதிப்படுத்தக் கூடிய நிலைபேறான ஒரே முறைமை.

அந்தவகையில் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியிடம், இலங்கையின் நீண்டகால தேசியப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு இந்திய அரசின் பெறுமதிமிக்க ஒத்துழைப்பை வழங்குமாறு பகிரங்கமாக வேண்டுகோள் விடுக்கிறோம் - என்றார்.

(ச-125,20,27,66)

**சுபிரி தன சம்பத**
திகதி 03.04.2025 | தினம் வியாழக்கிழமை | வெற்றி வாரம் 0503
DLB
ஆங்கில எழுத்து W | வெற்றி இலக்கம் 6 2 3 8 2 0

**Super Ball** DLB
திகதி 03.04.2025 | தினம் வியாழ்க்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2769 | ஆங்கில எழுத்து Q | வெற்றி இலக்கம் 20 21 69 73

**சனிதா** DLB
திகதி 03.04.2025 | தினம் வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து Z | வெற்றி இலக்கம் 18 28 41 48 | வெற்றி வாரம் 4930

**SASIRI** DLB
திகதி 03.04.2025 | தினம் வியாழக்கிழமை
வெற்றி வாரம் 0656 | வெற்றி இலக்கம் 37 42 44

**லக்ன ராசி**
திகதி 03.04.2025 | தினம் செவ்வாய்க்கிழமை
சிம்மம் | வெற்றி இலக்கம் 15 31 37 60 | சீட்டிழுப்பு வாரம் 4481
DLB

**KAPRUKA** DLB
திகதி 03.04.2025 | தினம் வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து V | சுப்பர் இலக்கம் 14 | வெற்றி இலக்கம் 01 23 38 71 | வெற்றி வாரம் 1945

**அத கோடிபதி** DLB
திகதி 03.04.2025 | தினம் வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து X | வெற்றி இலக்கம் 03 12 21 24 | வெற்றி வாரம் 2595

# உள்ளூராட்சித் தேர்தலுக்காக 18 மில். வாக்காளர் அட்டைகள்

கொழும்பு, ஏப்.4

உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்காக தேர்தல்கள் திணைக்களம் 18 மில்லியன் வாக்காளர் அட்டைகளைக் கோரியுள்ளது. தற்போது 30 இலட்சம் வாக்காளர் அட்டைகள் அச்சிடப்பட்டுள்ளன என்று அரச அச்சகத் திணைக்களத்தின் தலைவர் பிரதீப் புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது 109 உள்ளூராட்சிசபைகளுக்கான தபால்மூல வாக்களிப்புக்குரிய வாக்காளர் அட்டைகள் அச்சிடப்பட்டுள்ளன. நான்கு மாவட்டங்களுக்குரிய வாக்காளர் அட்டைகள் அச்சிடப்பட்டுள்ளன. 339 உள்ளூராட்சி சபைகளுக்கான வாக்கெடுப்புக்கு 18 மில்லியன் வாக்காளர் அட்டைகளைத் தேர்தல்கள் ஆணைக்குழு கோரியுள்ளது - என்றார். (எ-இ)



# பட்டலந்த வதைமுகாம் சாட்சி சி.ஐ.டி.யிடம் மனு கையளிப்பு

கொழும்பு, ஏப்.4

பட்டலந்த வதைமுகாமின் நேரடிச் சாட்சி என ஒருவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் மனுவொன்றைக் கையளித்துள்ளார். வதைமுகாம் தொடர்பாக உடனடியாக விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது

பட்டலந்த வதைமுகாம் தொடர்பாக ஊடகங்கள் வாயிலாகத் தெரிவித்தபோதும் அது கவனிக்கப்படவில்லை. அதனாலேயே குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் மனுவைக் கையளித்துள்ளேன். இராணுவ பொலிஸ் பிரிவில் பல வருடங்களைப் புதைப் படத் தலைமறைவாகப் பணியாற்றியுள்ளேன். கொழும்பில் இருந்த வதைமுகாம்கள், பட்டலந்த வதைமுகாமுக்கு கைதுசெய்யப்பட்டு கொண்டுவரப்பட்ட நபர்கள் கண்முன்னே சித்திரவதை செய்யப்பட்டுக் கொடூரமாக கொலை செய்யப்பட்டமைத் தொடர்பில் 1996 ஆம் ஆண்டு ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளித்திருந்தேன்.

பட்டலந்த வதை முகாமில் கொல்லப்பட்டவர்களின் தரப்பினரே தற்போது ஆட்சியில் உள்ளனர். 60 ஆயிரம் உயிர்கள் பறிக்கப்பட்டமைக்கு நீதி வழங்கவேண்டிய காலம் இது. உடனடியாக பட்டலந்த விவகாரம் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும் என்று கோருகின்றேன் - என்றார். (எ-இ)

# உதவிப்பணம் விநியோகம்

யாழ்ப்பாணம், ஏப்.4

தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு பொதுசன மாதாந்த உதவிப்பணம் மற்றும் நோய்க் கொடுப்பனவு பெறுவோருக்கான ஏப்ரல் மாதக் கொடுப்பனவுகள் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் விநியோகிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் இந்தக் கொடுப்பனவுகளைப் பெறுவோர் எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச அஞ்சல் அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர். (ச-25,9)

# தேர்தலில் களமிறங்கும் உவிந்து விஜேவீர




கொழும்பும், ஏப். 4

எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நாம் போட்டியிடுகின்றோம் எனப் மக்கள் விடுதலை முன்னணியின் படுகொலை செய்யப்பட்ட தலைவர் ரோஹண விஜேவீரவின் மகன் உவிந்து விஜேவீர தெரிவித்துள்ளார்.

தற்போது அரசாங்கத்தின்மீது மக்கள் விரக்தியடைந்துள்ளனர். இந்த பின்னணியில் இரண்டாம் தலைமுறை அமைப்பு சார்பில் இம்முறை உள்ளூராட்சிசபைத் தேர்தலில் நாம் போட்டியிடுகின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவயதுக்கர்ப்பம் வடக்கில் அதிகரிப்பு



## சிறுவர் காப்பக இணைவுகளும் சடுதியாக உயர்வு

**யாழ்ப்பாணம், ஏப். 4**

**வடக்கு மாகாணத்தில் சிறுவர் துஷ்பிரயோகம், இளவயதுக் கர்ப்பம் என்பன முன்னைய காலங்களுடன் ஒப்பிடுகையில் கணிசமாக உயர்வடைந்துள்ளது என்று வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் யுனிசெப் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டினார்.**

வடக்கு மாகாணத்துக்கு விஜயம்செய்து கள நிலைமைகளை ஆய்வுசெய்யும் யுனிசெப் அமைப்பினர் வடக்கு மாகாண ஆளுநரை நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆளுநர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே ஆளுநர் இதனைக் குறிப்பிட்டார்.

வடக்கில் பாடசாலை இடைவிலகல்கள் அதிகரித்துள்ளன. சிறுவர் இல்லங்களுக்குச்சிறுவர்களை சேர்க்கும்போக்கு அதிகரித்துச்செல்கின்றது. இதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளன. வறுமை, பெற்றோரின் மறுமணம் போன்ற காரணங்களால் சிறுவர் இல்லங்களில் சேர்ப்பதற்காக அனுமதிகோரும் சிறுவர்களின் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது.

குறிப்பாக சிறுவர் துஷ்பிரயோகத்துக்கான சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளன. இதனால் வட மாகாணம் தற்போது புதிய சவால்களை எதிர்கொண்டுவருகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-22.66)

# விமானத்தில் ஈழத்தமிழர் உயிரிழப்பு

ஓமான், ஏப்.4

லண்டனிலிருந்து ஓமான் வழியாக இலங்கைக்கு வருகைதந்த ஈழத்தமிழர் ஒருவர் விமானத்தில் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவர் சாவகச்சேரி டச்சு வீதியைச் சேர்ந்த க.உதயகுமார் என்பவராவார்.

மாரடைப்புக் காரணமாக இறப்புச் சம்பவித்துள்ளதாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அவரது உடல் ஓமான் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் உடலம் ஒப்படைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25.28)

# அநுராதபுரத்தில் விபத்து; குடும்பஸ்தரின் கால் அகற்றம்

அநுராதபுரம், ஏப்.4


அநுராதபுரம் ஏ-9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த யாழ். சாவகச்சேரியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரின் கால் அகற்றப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த லொறியொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து எதிரே நிறுத்திவைக்கப்பட்டிருந்த பிறிதொரு லொறியுடன் மோதியதில் இந்த விபத்து சம்பவித்தது. இதில் லொறியின் முன் ஆசனத்திலிருந்து பயணித்த யாழ்.வாசி காயமடைந்த நிலையில் அநுராதபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இதன்போதே அவரது ஒரு கால் அகற்றப்பட்டுள்ளது. (ச-33-27,28)

# 'யு.எஸ்.எயிட்' நிறுத்தம் 5,65,000 பேர் பாதிப்பு

கொழும்பு, ஏப்.4

அண்மையில் ட்ரம்பின் அறிவித்தல் காரணமாக யு.எஸ். எயிட் இலங்கைக்கான உதவிகள் அனைத்தையும் நிறுத்தியுள்ளது. இதனால் 5,65,000 பயனாளிகள் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். 400 பேர் வேலையிழந்துள்ளனர். 2024-2025 நிதியாண்டுக்கு 53 மில்லியன் டொலரை யு.எஸ்.எயிட் இலங்கைக்கு ஒதுக்கியிருந்தது.

ட்ரம்பின் அறிவித்தல் காரணமாக ஐ.நா ஊடாக மேற்கொள்ளப்படும் உதவித்திட்டங்களும், உலக உணவு ஸ்தாபனம் மற்றும் புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச அமைப்பு என்பவற்றினூடாக மேற்கொள்ளப்படும் உதவித்திட்டங்களும் தடைப்பட்டுள்ளன. (ச-33-6)



# புகையிலை வரி அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 4

அனைத்து பீடி சார்ந்த உற்பத்திப் பொருள்களுக்கான புகையிலை வரி நேற்றுமுன்தினம் முதல் நடைமுறைக்கு வரும்வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

குறித்த வரி, 2 ரூபாவிலிருந்து 3 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் வெளியிடப்பட்டுள்ளது. (ச-இ)

# ஏ.ஐ.யைப் பயன்படுத்தி பெண்கள் துஷ்பிரயோகம்

## இளைஞன் கைது

கொழும்பு, ஏப். 4

செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி இரண்டு பெண்களின் சாதாரண புகைப்படங்களை நிர்வாணப்படங்களாக மாற்றிப் பதிவிட்ட இரண்டு சம்பவங்கள் தொடர்பாக குற்றப்புலனாய்வுத் துறையினர் சந்தேகநபர் ஒருவரைக் கைதுசெய்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் அநுராதபுரம், சாலியபுரப் பகுதியைச் சேர்ந்த 20 வயதுடையவராவார். சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்தியபோது எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ச-இ)




பிச்சை எடுக்குதாம் பெருமாள் அதைத் தட்டிப்பறிக்குதாம் அனுமன் எண்ட கதைக்கு ஒரு முடிவே இருக்காதுபோல. அதிலையும் அடுத்தவைக்குவாற, அதுவும் ஏழைபாழைகளுக்கு வாற உதவியளை அப்பிடியே இடைநடுவில தங்கட பொக்கற்றுக்குள்ள சுருட்டிப் போடுற பழக்கம் எப்பதான் எங்கட ஆக்களை விட்டுப்போகுமோ தெரியேலை.

வடக்கில இருக்கிற, போரால பாதிக்கப்பட்ட ஒரு மாவட்டத்தில இப்பிடி அடுத்தவைக்கு வந்த பொருள்களை அதிகாரி ஒருத்தர் ஆட்டையைப் போட்ட கதை இப்பதான் வெளியில வந்திருக்கு. அந்த மாவட்டக் கச்சேரிக்கு போனவருசக் கடைசியில வெள்ளத்தால பாதிக்கப்பட்ட சனத்துக்கு குடுக்கச்சொல்லி, நிவாரணச்சாமான்கள் வந்திருக்குது. அதைக் கச்சேரிக் காரர்தான் பொறுப்பெடுத்து, ஆக்களுக்கும் குடுத்தவை. அப்பிடித் வந்த பொருள்களில கிட்டத்தட்ட அம்பாதியிரம் ரூபாச் சாமான் மிஸ்ஸிங்காம். ஆர் அந்த நிவாரணச் சாமானை இடையால அரிச்செடுத்த எலி? எண்டு தேடிப்பார்த்திருக்கினம். ஆனால் அப்பிடித் தேடேக்க நிவாரணமா வந்த சாமானெல்லாம் சனத்துக்குக் குடுபட்ட பதிவுகள் சரியாக் கிடந்திருக்குது. அப்ப எப்பிடி நிவாரணச் சாமான் காணாமல் போகுமெண்டு கச்சேரிப் பெரியவர் கடுமையா ஆராயேக்கதான், ஒரு விசயம் பிடிபட்டிருக்குது. எவ்வளவு சாமான் வந்தது எண்டு அதுக்குப் பொறுப்பான அதிகாரியள் பதிஞ்சு எடுக்கிறவை. அப்பிடி பதியேக்கையே, ஆட்டையைப் போட்ட பொருள்களைக் கழிச்சுக் கொண்டு, பதிஞ் சுவிட்டால் ஒருத்தராலையும் ஒண்டும் கண்டுபிடிக்கேலாது. வெள்ளநிவாரணச் சாமான்களைப் பொறுப்பெடுத்த கச்சேரியின்ர பெண் அதிகாரியும் இப்பிடியொரு திருகுதாளம் செய்துதான், சனத்துக்கு வந்த சாமானை தன்ர வீட்ட கொண்டு போயிருக்கிறாவாம். இந்த வேலையை அவா தனியச் செய்யேலை. அவான்ர புருசனும் அங்கதான் வேலை செய்யிறாராம், அவரும், இந்தப் பெண் அதிகாரியின்ர சாரதியும் இவாவோட சேர்ந்து இந்தக் கூட்டுக் களவைச் செய்திருக்கினம்.

இப்ப அந்தப் பெண் அதிகாரியை வேற இடத்துக்கு மாத்திப்போட்டினம். அவான்ர சாரதிக்கும் விசாரணை நடக்குது. இப்ப தங்களுக்கும் இந்தவிசயம் தொடர்பா விசாரணை வரும் எண்ட பயத்தில, அதை மடைமாத்துற வேலையில அந்தப்பெண் அதிகாரி இறங்கியிருக்கிறாவாம். கச்சேரிப் பெரியவரைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் சொல்லி, அதை உண்மை மாதிரி பரப்பிக்கொண்டு இருக்கிறாவாம். ஆனால் கேக்கிறவை அவா சொல்றதை நம்பவேணுமே? இப்பிடி பாதிக்கப்பட்ட சனத்துக்கு வந்த நிவாரணத்தை பாதிவழியிலேயே பறிக்கிறவையை எல்லாம் திசைகாட்டி அரசாங்கமும் பார்த்துக் கொண்டு தானே இருக்குது.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தந்தை வழியில் ஆதாயம் கிடைக்கும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டு. அலுவலகத்தில் முக்கிய பொறுப்பு ஒன்றுக்கு உங்கள் பெயரை பரிந்துரைக்க வாய்ப்பு உண்டு.

**இடபம்:** வீண் செலவுகளும் ஏற்படக்கூடும். எதிரிகளால் மறைமுகத் தொந்தரவுகள் ஏற்படக்கூடும் என்பதால் எச்சரிக்கை தேவை. கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்து வேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** குடும்பத்தில் மற்றவர்களை அனுசரித்துச் செல்லவும். வாகனத்தில் செல்லும்போது எச்சரிக்கை தேவை. எதிர்பாராத செலவுகளால் சிலர் கடன் வாங்கவும் நேரிடும். மாலையில் வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும்.

**கடகம்:** தாய்மாமன் வகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். மாலையில் உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உண்டாகும்.

**சிம்மம்:** மனதில் தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். முக்கிய பிரமுகர்களின் அறிமுகம் கிடைப்பதுடன், அவர்களால் ஆதாயமும் கிடைக்கும்.

**கன்னி:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் உணவு விஷயத்தில் கவனம் தேவை. பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்:** கணவன் மனைவிக்கிடையே சிறுசிறு கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். வாழ்க்கைத் துணையின் தேவைகளைப் பூர்த்திசெய்வீர்கள். துணிச்சலாக சில முடிவுகளை எடுப்பீர்கள். பிற்பகலுக்கு மேல் புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம்.

**தனுசு:** மனதில் சஞ்சலம் ஏற்படும். வீண் செலவுகளால் கையிருப்புக் கரையும். தாய் வழி உறவுகளால் காரிய அனுகூலம் உண்டாகும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார்.

**மகரம்:** சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். புதிய டிசைனில் ஆடைகள் வாங்கி மகிழ்வீர்கள். நண்பர்கள் உதவிகேட்டு வருவார்கள்.

**கும்பம்:** திடீர்ச்செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். பிற்பகலுக்கு மேல் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மீனம்:** வாழ்க்கைத்துணை வழியில் சுபச்செலவுகள் ஏற்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உங்கள் தேவை அறிந்து மற்றவர்கள் உதவி செய்வார்கள். குடும்பத்தில் மற்றவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.



# பலமான ஹைதராபாத்தை பந்தாடியது கொல்கத்தா!

**கொல்கத்தா, ஏப். 4**

**ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில், பலம்மிக்க ஹைதராபாத்தை எந்தப் பதற்றமும் இல்லாமல் மிகவும் இலகுவாகத் தோற்கடித்தது கொல்கத்தா.**

முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்ப வீரர்களான குயின்டன் டி ஹொக் ஓர் ஓட்டத்துடனும், நரைன் 7 ஓட்டங்களுடனும் ஏமாற்றினாலும், வெங்கடேஷ் ஐயர் மற்றும் ரகுவன்ஷி ஆகியோரின் மிகச்சிறந்த ஆட்டத்தால் கொல்கத்தா பலமான நிலையை அடைந்தது. அதிகபட்சமாக வெங்கடேஷ் ஐயர் 60 ஓட்டங்களையும், ரகுவன்ஷி 50 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஹைதராபாத் அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 120 ஓட்டங்களை மட்டுமே பெற்று 80 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. கிளாசன் பெற்ற 33 ஓட்டங்களே அதிகபட்சம். ஹைதராபாத் அணியின் ஆரம்ப வீரர்களான ஹெட் 4 ஓட்டங்களுடனும், அபிஷேக் சர்மா 2 ஓட்டங்களுடனும், இசான் கிஷான் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் வைபவ் அரோரா மற்றும் வருண் சக்கரவர்த்தி இருவரும் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (ம)




## யோகசுவாமி குருபூசை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப். 4

தவத்திரு சிவயோக சுவாமிகளின் வருடாந்த குருபூசை தினத்தை முன்னிட்டு மாகாணமட்டத்தில் நடத்தப்படும் நற்சிந்தனைப் பாராயணமும் பேச்சுப் போட்டிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வும் எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கொழும்புத்துறை யோகர் சுவாமிகள் அறக்கட்டளை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

போட்டிகளில் வலய மற்றும் மாகாண மட்டத்தில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ச-17)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப்.4

2024 ஆம் ஆண்டு இடம்பெற்ற கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் 'சி' தரச் சித்திகளுக்கு மேல் பெறக்கூடிய மாணவர்களுக்கான விசேட கலந்துரையாடல், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கலந்துரையாடலில் சங்கானை மற்றும் சண்டிலிப்பாய் கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றமுடியும்.

இதன்போது மாணவர்களின் எதிர்காலக் கற்றல் செயற்பாடு மற்றும் கற்றலின்போது அவர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளுக்குத் தீர்வு காணுதல் போன்ற விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளன. (ச- 25, 66)

## வல்லிபுரம் ஆழ்வாருக்கு ஸ்ரீராம நவமி வழிபாடு

யாழ்ப்பாணம், ஏப். 4

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுரம் ஆழ்வார் கோவிலில் ஸ்ரீராம நவமி வழிபாடு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. காலை 7 மணிக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெற்று, தொடர்ந்து தாலாட்டுப் பாடலுடன் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி உள்வீதி வலம் வருவார். மாலை 4 மணிக்கு இரண்டாம் சுற்றுப் பூஜையும், இரவு 9 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் இடம்பெறும். தொடர்ந்து பெருமாள் வெளிவீதி உலாவந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பார். (ச-25,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




**உண்மை - நேர்மை - அஞ்சாமை**

## கச்சதீவு மீட்பும் மீனவர் பிரச்சினையும்?

இலங்கையிடம் இருந்து கச்சதீவை இந்தியா மீளப்பெற வேண்டும் என்று தமிழகத்தின் சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டசபையில் கொண்டுவந்த இந்தத் தனிநபர்பிரேரணைக்கு அனைத்துக்கட்சிகளும் ஆதரவளித்திருக்கின்றன. கச்சதீவு விவகாரம் தமிழ்நாட்டின் அரசியலில் ஒரு 'வாக்குப்பெட்டிக் கருவியாக' பயன்படுத்தப்பட்டுவரும் நிலையில், தமிழகத்தை ஆளும் திராவிட முன்னேற்றக் கழகமும் இந்த விவகாரத்தை அரசியல் செல்வாக்கை அதிகரிக்கக் கையிலெடுத்திருக்கின்றது. தமிழக மீனவர்களின் எல்லைதாண்டிய மீன்பிடியைக் கட்டுப்படுத்துவதற்கு எந்தவிதமான காத்திரமான நடவடிக்கைகளையும் முன்னெடுக்காது - எல்லைதாண்டிய மீன்பிடிக்கு மறைமுகமான ஆதரவைக் கொடுக்கும் தமிழக அரசு, கச்சதீவு விவகாரத்தை 'வாக்குப்பெட்டிக் கருவியாக' பயன்படுத்த முனைவது நிச்சயம் இந்தப் பிரச்சினையைச் சிக்கலானதாகவே மாற்றப்போகின்றது.

இலங்கை - இந்தியா அரசாங்கங்களுக்கு இடையிலான ஒப்பந்தத்தின்படி கச்சதீவு இலங்கைக்கு வழங்கப்பட்டது. அதற்காக இலங்கை இந்தியாவுக்கு எதையும் வழங்காவிட்டாலும், இந்த ஒப்பந்தத்தின் விளைவாக சில மறைமுக நன்மைகளை இந்தியா பெற்றுக்கொண்டிருக்கின்றது. கச்சதீவுக்கு ஈடாக இலங்கை வங்கக்கடல், மன்னார் வளைகுடாப் பகுதிகளில் இந்தியாவுக்குச் சாதகமான கடல் எல்லை வரையறைகளை ஏற்றுக்கொண்டிருந்தது. இது இந்தியாவின் கடற்பொருளாதார மண்டல விரிவாக்கத்துக்கு உதவியது. இவற்றைவிடவும் இந்துசமுத்திரத்தின் கேந்திர முக்கியத்துவம் மிக்க இடத்தில் உள்ள இலங்கை விவகாரங்களில் இந்தியாவின் செல்வாக்கை அதிகரிக்கவும் கச்சதீவே வழிவகுத்தது எனலாம். கச்சதீவை இலங்கைக்கு இந்தியா தாரைவார்த்தது என்று பொதுவாக இந்தியாவில் - தமிழ்நாட்டில் குற்றஞ்சாட்டப்பட்டாலும் கச்சதீவை இலங்கைக்குக் கொடுத்து அதற்குப் பிரதிபலனாக பல நன்மைகளை இந்தியா பெற்றுக்கொண்டிருக்கின்றது என்ற உண்மையை எவரும் மறுக்க முடியாது.

இலங்கையில் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் இலங்கையின் வடக்குக் கடலில் தமிழ்நாட்டு மீனவர்களின் எல்லைதாண்டிய மீன்பிடி பெரும் பிரச்சினையாக உருவெடுத்திருக்கின்றது. பலதசாப்தகால போரால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு மீனவர்கள் மீண்டெழுவதற்கு, தமிழக மீனவர்களின் அத்துமீறல் பெரும் தடையாகவே இருக்கின்றது. தமிழக மீனவர்களின் இழுவைமடிப்படகுகள் வடக்குக் கடலின் மீன்வளத்தை வகைதொகையின்றி அள்ளிச்செல்வதும், தமிழக மீனவர்களின் கடற்கலன்களால் வடக்கு மீனவர்களின் மீன்பிடி உபகரணங்கள் சேதமாக்கப்படுவதும் தொடர்வதால், வடக்கு மீனவர்கள் கடுமையான பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டியிருக்கின்றது. வடக்குக் கடலில் நீண்டகாலமாகத் தொடரும் எல்லைதாண்டிய மீன்பிடியைத் தடுப்பதற்கான ஆக்கபூர்வமான செயற்பாடுகளை வடக்கு மீனவர்கள் வலியுறுத்திவருகின்றபோதும், அதில் அவர்களுக்கு ஏமாற்றமே கிட்டுவதால் இருநாட்டு மீனவர்களுக்கும் இடையில் பெரும் விரிசலை ஏற்படுத்தும் விவகாரமாக இது மாறியிருக்கின்றது.

ஆனால் இலங்கையோ 'இந்தியாவோ' தமிழகமோ இந்தப் பிரச்சினைக்கான சுமூகத் தீர்வைப் பெற்றுக்கொள்ள முயலாமல் தொடர்ந்து புகையவிட்டு -இருநாட்டு மக்கள் மனங்களில் இடைவெளியை ஏற்படுத்தவே முயல்கின்றன. இந்தவிவகாரத்தை அரசியலாக்கி அதன்மூலம் ஆதாயம் தேட முயற்சிக்கப்படுகின்றதே தவிர ' இருநாட்டு மீனவர் நலன்களும் நோக்கப்படவில்லை. வடக்கு மீனவர்களின் ஆதங்கங்களைப் புரிந்துகொள்ள முயலாது பிரச்சினையின் தார்ப்பரியத்தை உணராது தமிழ்நாட்டு சட்டசபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானமும் அதன் ஓர் அங்கமே. கச்சதீவை மீளப்பெறுவதற்கான சாத்தியங்களைக் கடாசிவிட்டு, தமிழக முதலமைச்சரால்அரசியல் பரபரப்புக்காக நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் என்றே இதைக் கொள்ளவேண்டும்.


உணர்வுகளுடன் தொடர்புடைய இந்தச் சிக்கலை அரசியல் சார்பற்று, நீண்டகால நோக்குடன் அணுக வேண்டிய தேவை இருக்கின்றது. குறுகிய அரசியல் நோக்கங்களுடன் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் இருநாட்டு உறவுக்கு நிச்சயம் கேடாவே மாறும். இலங்கை - இந்தியா இந்த விவகாரத்தில் இணைந்து செயற்பட்டு தீர்வொன்றைக்காண முயலவேண்டும். இல்லாவிட்டால் இருநாட்டு மீனவர்கள் பாதிக்கப்படுவது தொடர்கதையாகவே இருக்கும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


**நாளொரு நல்வார்த்தை**

நம்பிக்கை என்பது கண் விழித்திருக்கும்போதே காண்கிற கனவு.

– பிளினி–




## ஒன்றரை இலட்சம் ரூபா வருமானத்துக்கு வரிவிலக்கு

கொழும்பும், ஏப். 4

**புதிய தனிநபர் வருமான வரி அறிவித்தலின் பிரகாரம் ஒன்றரை இலட்சம் ரூபா சம்பளம் பெறும் உத்தியோகத்தர்களிடமிருந்து வரி அறவிடப்பட மாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.**

2 இலட்சம் ரூபா சம்பளம்பெறும் உத்தியோகத்தர்களிடமிருந்து 3 ஆயிரம் ரூபாவும், 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா சம்பளம் பெறும் உத்தியோகத்தர்களிடமிருந்து 8 ஆயிரம் ரூபாவும், 3 இலட்சம் ரூபா சம்பளம்பெறும் உத்தியோகத்தர்களிடமிருந்து 18 ஆயிரத்து 500 ரூபாவும், 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா சம்பளம்பெறும் உத்தியோகத்தர்களிடமிருந்து 32 ஆயிரத்து 500 ரூபாவும், 4 இலட்சம் ரூபா சம்பளம் பெறும் உத்தியோகத்தர்களிடமிருந்து 50 ஆயிரம் ரூபாவும், 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா சம்பளம் பெறும் உத்தியோகத்தர்களிடமிருந்து 68 ஆயிரம் ரூபாவும், 5 இலட்சம் ரூபா சம்பளம் பெறும் உத்தியோகத்தர்களிடமிருந்து 86 ஆயிரம் ரூபாவும் வரியாக அறவிடப்படவுள்ளது என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது. (ச-6)



## பொலிஸ் நாய்கள் ஏலத்தில்

கொழும்பு, ஏப். 4

கண்டியில் உள்ள பொலிஸ் தலைமையகத்தில் பயிற்சிபெற்று நீண்டகாலமாகப் பணியாற்றி ஓய்வுபெற்ற பொலிஸ் நாய்களின் ஏலம் நாளை நடைபெறும் என்று நாய்கள் பிரிவின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஏலத்தில் 45 பொலிஸ் நாய்கள் ஏலத்தில் விடத்திட்டமிடப்பட்டுள்ளது. (ச-இ)

## நீதிபதி பதவிநீக்கம்

கொழும்பு, ஏப்.4

மாரவில நீதிமன்ற நீதிபதி பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். நீதித்துறையின் சுதந்திரத்தையும் நெறிமுறைகளையும் பேணுவதற்காக நடத்திய விரிவான விசாரணையின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக நீதிச்சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நீதிபதி ஒருவர் பதவிநீக்கம் செய்யப்பட்ட இந்தச் சம்பவம் நாட்டின் நீதித்துறை வரலாற்றில் முக்கியமான நிகழ்வாகக் கருதப்படுகிறது. (ச-41-சி)




## மதுபான உற்பத்தியில் உற்பத்தித் திகதி கட்டாயம்

கொழும்பு, ஏப்.4

சகல மதுபான மற்றும் மென்பான உற்பத்தி நிறுவனங்களும் ஏப்ரல் முதலாம் திகதி முதல் தமது உற்பத்திகளில் உற்பத்தித் திகதியைப் பொறிக்கவேண்டுமென மதுவரித்திணைக்களம் உத்தரவிட்டது.

உரியமுறையில் தயாரிக்கப்படாத உற்பத்திகளிலிருந்து பாதுகாப்பதற்காகவே இந்த நடவடிக்கை என மதுவரித்திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-33-6)

## போராட்டத்துக்குத் தயாராகும் நாடாளுமன்ற ஊழியர்கள்

கொழும்பு, ஏப்.4

நாடாளுமன்ற உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக அரசாங்கத்துக்கு எச்சரித்துள்ளனர். அண்மையில் மீளாய்வுசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் சம்பள சுற்றறிக்கையின் பிரகாரம் நாடாளுமன்றத்தில் கடமையாற்றும் முகாமைத்துவ உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகள் கணிசமானளவு குறைக்கப்பட்டுள்ளது என அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் தாங்கள் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தைச் சந்திப்பதற்கு முயன்றபோதும் அவரைச் சந்திக்கமுடியவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ச-22, 6)

**நாளை**


சனிக்கிழமை -பங்குனி- 22

05.04.2025

சுபநேரம் : 03.09- 04.39

ராகுகாலம் : 09.09 - 10.39


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கசிப்புக் காய்ச்சுமிடம் புங்குடுதீவில் முற்றுகை!

புங்குடுதீவு, ஏப். 4
புங்குடுதீவு ஒன்பதாம் வட்டாரம் வல்லன் நாவில் குளத்தை அண்டிய பற்றைக்காடுகள் நிறைந்த பகுதியில் சூட்சுமமான முறையில் இயங்கிவந்த சட்டவிரோத கசிப்புக் காய்ச்சுமிடம் கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்றுகையிடப்பட்டு முற்றாகத் தீமூட்டி அழிக்கப்பட்டது. புங்குடுதீவு மடத்துவெளிப் பிரதேச கிராமஅலுவலர் , தீவகம் சிவில் சமூக அமைப்பின் உறுப்பினர்கள், புங்குடுதீவுக் கடற்படையினர் ஆகியோர் இணைந்து சட்டவிரோதச் செயலை முறியடித்தனர். (ச-25. 125)

# திட்டங்களின் முன்னேற்றங்கள் நேரடியான கள ஆய்வு கட்டாயம்

### திணைக்களத் தலைவர்களுக்கு ஆளுநர் பணிப்பு

**யாழ்ப்பாணம், ஏப்.4**
**2025ஆம் ஆண்டுக்கான திட்டங்களின் நடைமுறையாக்கத்தை நேரடியாகச் சென்று திணைக்களத் தலைவர்கள் பார்வையிடவேண்டும். ஆகக்குறைந்தது இரண்டு வாரங்களுக்கு ஒருமுறையாவது திட்டமுன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தை செயலாளர்கள் நடத்தவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அறிவுறுத்தியுள்ளார்.**

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற மீளாய்வுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
பொதுமக்கள் அலுவலகத்துக்கு வந்து அலுவலர்களுக்காக காத்திருக்கக்கூடாது. டிஜிற்றல் மயமாக்கல் செயற்றிட்டத்தையும் படிப்படியாக நாம் ஆரம்பிக்கவேண்டும். 2025ஆம் ஆண்டு முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்களின் நிதி முன்னேற்றம் தொடர்பில் மாத்திரமே வடக்கு மாகாண சபையின் இணையத்தளத்தில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. நிதி முன்னேற்றத்துடன், பௌதீக முன்னேற்றத்தையும் இணையத்தளத்தில் வெளியிடவேண்டும். திணைக்களத் தலைவர்கள், அமைச்சுகளின் செயலாளர்கள் சுழற்சிமுறையில் பின்தங்கிய கிராமங்களை நேரில் சென்று பார்வையிடவேண்டும்.
2026ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தவுள்ள திட்டங்களின் முன்மொழிவுகளை எதிர்வரும் மே மாதத்துக்கு முன்னர் நாம் சமர்ப்பிக்கவேண்டியுள்ளது. எனவே அதற்கான திட்டமிடல்களையும் இப்போதே ஆரம்பிக்கவேண்டும். குறிப்பாக வீதி அபிவிருத்தித் திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம் என்பன எவ்வளவு நிதி கிடைத்தால் வீதிகளை அபிவிருத்தி செய்ய முடியும் என்பதை அடையாளப்படுத்த வேண்டும் - என்றார். (ச-33-113)



நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் கோயில் வருடாந்த பெருந்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (ச-41)

## கௌரவிப்பு

சாவகச்சேரி, ஏப்.4
சாவகச்சேரிப் பிராந்தியத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டச் சிக்கன கடன்வழங்கும் கூட்டுறவுச் சங்கங்க சமாசத்தின் வெளிக்கள உத்தியோகத்தராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் ந.சிவகுமாரனை கௌரவிக்கும் நிகழ்வு திருமதி வ.சுமதி தலைமையில் சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (ச-41-17)



# இந்திய இழுவைமடிப்படகுகள் எல்லைமீறலைக் கட்டுப்படுத்துக!

### மோடிக்குக் கையளிப்பதற்கு மனு சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 4
இந்திய இழுவைமடிப்படகுகளின் எல்லைமீறலைக் கட்டுப்படுத்தவேண்டும் என வலியுறுத்தி பிரதமர் மோடியிடம் சமர்ப்பிதற்கான மனுவொன்றை யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனம் நேற்றுமுன்தினம் யாழ்.இந்தியத் துணை தூதுவராலயத்திடம் கையளித்துள்ளது.
இதுகுறித்து யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் அ. மரியதாஸ் தெரிவிக்கையில்,
இந்தியப் பிரதமர் மோடி வருகையின்போது எமது மீனவ மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் எடுத்துரைப்பதற்கு சந்திக்கமுடியாதுவிடினும் இந்தியத் துணைத் தூதரகத்தில் இதுதொடர்பிலான மனுவொன்றைக் கையளித்துள்ளோம். இந்திய இழுவைமடிப்படகுகளின் அத்துமீறலைக் கட்டுப்படுத்தவேண்டும் என்றே நாங்கள் பிரதானமாகக் கேட்கின்றோம். இதனை இந்தியப் பிரதமர் கவனத்திற்கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றார். (ச-125)

# மாற்றுத்திறனாளிகளுக்கான தேசியமட்ட விளையாட்டுகள்

### யாழிலிருந்து 17 பேர் பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஏப்.4
மாற்றுத்திறனாளிகளுக்கான தேசியமட்ட விளையாட்டுப்போட்டிகள் கொழும்பில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை தொடக்கம் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றன. அதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 17 மாற்றுத்திறனாளிகள் பங்கேற்கவுள்ளனர். (ச-25,9)



# மீன்பிடிக் கற்கைகள்பீடத்தை முல்லையில் அமையுங்கள்

### ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

முல்லைத்தீவு, ஏப். 4
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மீன்பிடி கற்கைகள் பீடத்தை முல்லைத்தீவு மாவட்டத்தில் விரைந்து அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.
முல்லைத்தீவில் மீன்பிடிக் கற்கைகள் பீடத்துக்காக 120ஏக்கர் காணிகள் ஒதுக்கீடுசெய்யப்பட்டு 7வருடங்கள் கடந்துள்ளபோதும் இதுவரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் எவ்விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.
தற்போது குறித்த பல்கலைக்கழக மீன்பிடிக் கற்கைகள் பீடத்தை வேறு இடங்களுக்குக் கொண்டுசெல்வதற்குரிய நோக்கம் இருப்பதாக அறியமுடிகின்றது. ஆனால் இவ்வாறு வேறு இடங்களுக்கு கொண்டு செல்வதை எம்மால் ஒருபோதும் அனுமதிக்கமுடியாது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிணைப்புக்காக யாழில்.வீதித்தடை

நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் நீரிணைப்பு வேலைகளுக்காக மானிப்பாய் வீதி (பிரப்பங்குளம் சந்தியிலிருந்து ஐயனார் கோவில் வீதிச்சந்திவரை) மற்றும் ஓட்டுமடம் வீதி ( முஸ்லிம் கல்லூரி வீதியிலிருந்து காங்கேசன்துறை வீதி வரை) என்பன இன்று வெள்ளிக்கிழமை, நாளை சனிக்கிழமை, நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் இரவு 8 மணி தொடக்கம் காலை 6 மணிவரை மூடப்பட்டிருக்கும்.


இந்தக் காலப்பகுதியில் வீதியினைப் பயன்படுத்துவோர் போக்குவரத்தினைச் சிரமமின்றி மேற்கொள்ள மாற்றுப் பாதையைப் பயன்படுத்துமாறு மாநகரசபை அறிவித்துள்ளது. (ச-25)

# பெருவிழா

கொக்குவில் மேற்கு வராஹிபுரம் திருவருள்மிகு ஸ்ரீ வராஹி அம்பாள் தேவஸ்தானபிரம்மோற்சவ விஞ்ஞாபனம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் 16 ஆம் திகதி புதன்கிழமை பூங்காவனமும் இடம்பெறும். 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு வைரவர் பொங்கலும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
BARATHY
சித்தன்கேணி
மூன்று நிறுவனங்களிலும்
A/L 2027
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம் - ஏப்ரல் - 06
ஞாயிறு காலை 8.00 am
அனுமதிகளை பெற்றுக்கொள்ளலாம்
A/L 2025, 2026, பிரிவு I, II
நடைபெறுகின்றன
தொடர்புகளுக்கு
077 376 3511
(CR/44740) J-1

## பதினெட்டாம் மற்றும் முதலாம் ஆண்டில் உங்கள் நினைவுகளைச் சுமந்து




**சூசைப்பிள்ளை வேதநாயகம்** — **வேதநாயகம் யேசுராணி**

**02.02.2007** விண்ணில் **04.04.2024**

கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்
நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான
சரீரத்துக்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார் (பிலி 1:21:3:21)

அப்பா, அம்மா

நற்பெற்றோராய் உங்கள் பரிவையும், பாசத்தையும்
தியாக நேசத்தையும் எமக்கு பொழிந்தீர்கள்
உதிரத்தை வியர்வையாக்கி உங்களுக்காய்
வாழாமல் எமக்காய் வாழ்ந்தீர்கள்
பெருமரமாய் எமக்கு நிழலாய் இருந்தவர்கள் நீங்கள்
எப்போது நினைத்தாலும் எமது கண்கள் குளமாகின்றது
ஏனெனில் உங்கள் அன்பு எங்கள் மேல்
அவ்வளவு உண்மையாக இருந்தது.
கனிவான உங்கள் இதயம் களங்கமற்ற செயல்கள்
நாம் படிக்கக் கூடிய பண்புகள் பல நிறைந்த
உங்கள் வாழ்க்கை, தட்டிக் கொடுக்கும் கரங்கள்
இவையெல்லாம் இன்றும் தெரிகிறது எங்கள் கண்களில்
தேற்றும் உங்கள் வார்த்தைகள் இன்றும்விழுகிறது எமது செவிகளில்.....




என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

இல 35, மாட்டீன் லேன், யாழ்ப்பாணம். (CS/2863) J-1

# மரண அறிவித்தல்

## சிவனுத்தேவர் கறுப்பசாமி



கொக்குவிலை சேர்ந்த சிவனுத்தேவர் கறுப்பசாமி அவர்கள் 03.04.2025 (வியாழக்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவனுத்தேவர் ஒண்டியம்மாவின் புதல்வனும், பிச்சம்மாவின் அன்புக்கணவரும், முத்தையா தேவரின் (மன்னார்) அன்புச்சகோதரனும் கந்தசாமி (இந்தியா), சுப்புலட்சுமி, விஜயலட்சுமி (மாத்தளை), மகாலட்சுமி (புசல்லாவ), சந்திரசேகரம் (முருகமூர்த்தி), கதிர்காமநாதன், உமாதேவி (இந்தியா), சிவகுமார் (நவாலி), நாகராஜா, நாகேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும், அன்னகாமாட்சி, அமரர் ராமசாமி, சுந்தரம், மகேந்திரன், குனேந்தினி, தேவகி, சிவலிங்கம், உதயநிலா, வனிதா ஆகியோரின் அன்புமாமனாரும் கார்த்தீபன், கதிர்வேல், மகாலட்சுமி, துளசிகன், கோகுலன், ஜதுகுலன், துவாரகன், கோபிராம், தாட்சாயினி, சாமந்தி, கௌதமன், சஜீவன், தர்ஷிகா, லபிஷேக், சபரிவாசன், அக்ஷயா ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும் வாசுகி, லங்கேஸ்வரா, விஜிதா, நிருஜன், தனுஷன், சோபனா, பவித்திரன், அருன்பிரசாந், யோகபிரசான், கௌரிதாஸ், அபிராமி ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் கவி, கீர்த்திகா, மகிழ்மித்திரா, இளவேல், ஆதிரன், முகேஸ், தக்ஷனா, வைஸ்ணவி, வைஷாலி, லியா, இஷா, விசாலினி, மகிழிந்தன், மகிழினி ஆகியோரின் அன்பு பூட்டனாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.04.2025 (வெள்ளிக்கிழமை) காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்**
**077 935 2253**

(CS 2884) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
17 . 10 . 1969

மறைவு
03 . 04 . 2025

**அருட்டந்தை அந்தோனி சில்வெஸ்ரர், அ.ம.தி**
**( Fr. A. Sylvester, O.M.I )**

அருட்டந்தை அ. சில்வெஸ்ரர், அ.ம.தி அவர்கள் நேற்று (03.04.2025) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார். அவரது பூதவுடல் நாளை, சனிக்கிழமை (05.04.2025) நண்பகல் 12:00 மணிவரை கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் அமைந்துள்ள புனித டீ மசனெட் சிற்றாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் யாழ். மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

பின்பு பிற்பகல் 3:30 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியை தொடர்ந்து அடிகளாரின் பூதவுடல் யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் இறைமக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: அமலமரித் தியாகிகள்**
**யாழ். மாகாணம்.**

(CS/57907) J-1

# காற்றாலை மின்திட்டத்தை மன்னாரிலிருந்து மாற்றுக

## சூழல் அமைப்புகள் கோரிக்கை

மன்னார், ஏப்.4

காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்துக்காக மன்னாருக்குப் பதிலாக வேறிடத்தை அரசாங்கம் தெரிவுசெய்யவேண்டும் என்று இலங்கையின் சூழல் பாதுகாப்பு அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன. கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பில் சூழல் பாதுகாப்பு அமைப்புகள் கூட்டாக இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளன.

காற்றாலை மின் திட்டத்துக்கு மன்னார் பொருத்தமற்ற இடம் என்று முன்னைய அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. இந்தத் திட்டத்துக்காக மன்னார் தீவுக்குப் பதிலாகவேறுஇடத்தை ஆராயவேண்டும் என்று சூழல் நீதிக்கான நிலையம், வனவிலங்கு மற்றும் இயற்கைப் பாதுகாப்புச் சமூகம், சூழல் பாதுகாப்பு மன்றம் உள்ளிட்ட அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

(எ-இ)

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்**

**வருடாந்தப் பொதுக் கூட்டமும் நிர்வாகக் குழுத் தெரிவும் 2025-2026**

எதிர்வரும் 06.04.2025 ஞாயிற்றுக் கிழமை காலை 09.00 மணிக்கு நடைபெறவிருந்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகக் குழுத் தெரிவும் தவிர்க்க முடியாத காரணத்தினால் 11.05.2025 ஞாயிற்றுக் கிழமை பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

02.04.2025 ப.சசிவர்ணன்/ செயலாளர்

மேலதிக விபரங்களிற்கு: www.jhcobajaffna.com

**மில் வேலைக்கு ஆட்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கும் அரைக்கும் ஆலைக்கு வேலையாட்கள் தேவை. அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:- 076 155 9905

**வேலையாள் தேவை**

சாவகச்சேரியில் உள்ள வீடு ஒன்றிற்கு வீட்டு வேலை செய்வதற்கு பெண் உதவியாளர் தேவை.

தொடர்பு:- 077 782 1896

(CR/44745) J-1

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



## சீதாலட்சுமி உதயசந்திரன்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வண்ணார் பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட சீதாலட்சுமி உதயசந்திரன் அவர்கள் கடந்த (01.04.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி - துரையம்மா தம்பதியரின் இளைய மருமகளும், காலஞ்சென்ற உதயசந்திரன் அவர்களின் அன்பு மனைவியும், உதயகுமார், உதயமலர், லட்சுமிகுமார் (குட்டி), ஜெயமலர், சுகந்தமலர் ஆகியோரின் இணையில்லா தாயாரும், நிரஞ்சனா, சிவனேசன், சிந்துஜா, நிதிதாஸ், உமாகணேசன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் யோகநாதன், காலஞ்சென்றவர்களான ஜெகநாதன், பற்பநாதன் மற்றும் கமலநாதன் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களானஇராஜபாக்கியம், மணியம்மா, சந்திரசேகரம், குணசேகரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், மினோஷ், உதித்தன், சுஜானிகா, பரிதி, வர்ஷன், நிலானி, டன்சிகா, திகழ், நேத்திரன், சர்வின், ஆகர்ஷன், அகரன், துருவனன், ஆரோன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம்
21.07.1950

மறைவு
01.04.2025

**76, பத்திரகாளி கோவிலடி,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 577 7717**
**077 505 6037**

(CS/57904) J-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேர்தல் ஒளிபரப்புக் கட்டணம் உயர்த்தப்பட்டதால் நெருக்கடி

## இலத்திரனியல் ஒளிபரப்பாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப்.4

**தொலைக்காட்சி மற்றும் வானொலி நிறுவனங்களிடம் இருந்து தேர்தல்கள் ஆணைக்குழுவால் பெறப்படும் தேர்தல் ஒளிபரப்புக் கட்டணம் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஆயிரத்து 300 வீதமாக உயர்த்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.**

இந்த அதிகரிப்பால் பல தொலைக்காட்சிகள் தேர்தல் முடிவுகளை ஒளிபரப்புவதில் இருந்து விலகக்கூடும் என்று இலங்கை இலத்திரனியல் ஒளிபரப்பாளர்கள் சங்கம் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

தேர்தல் முடிவுகளை நேரடியாக ஒளிபரப்புவது மக்களின் தகவல் அறியும் உரிமையை உறுதிப்படுத்தும் ஒரு முக்கிய அம்சமாகும். அதிக கட்டணம் காரணமாக தொலைக்காட்சிகள் ஒளிபரப்பிலிருந்து விலகினால், மக்களின் தகவல் அறியும் உரிமை மீறப்படும்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையையும், தொலைக்காட்சிகளுக்குக் கிடைக்கும் விளம்பர வருமான அளவையும் கருத்திற்கொண்டால், 8 மில்லியன் ரூபா போன்ற அதிக கட்டணத்தை எந்த ஒரு தொலைக்காட்சி நிறுவனமும் செலுத்தமுடியாது. ஆகையால் கடந்தகாலங்களில் வசூலிக்கப்பட்ட கட்டண அளவையே இம்முறையும் பயன்படுத்தவேண்டும் என்று அந்தச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஏ-இ)

# முதற் காலாண்டில் 722,276 சுற்றுலாவிகள்

கொழும்பு, ஏப். 4

இலங்கைக்கு வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில் மாத்திரம் 229,298 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ள நிலையில் முதற் காலாண்டில் சுற்றுலாப்பயணிகளின் மொத்த எண்ணிக்கை 7 இலட்சத்து 22 ஆயிரத்து 276 ஆகப் பதிவாகியுள்ளது.

இந்தியாவிலிருந்தே அதிகளவான சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# தபால்மூல வாக்களிப்புக்கு 7 இலட்சம் விண்ணப்பங்கள்

கொழும்பு, ஏப்.4

உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்காகச் சுமார் 7 லட்சம் தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் தபால்மூல வாக்களிப்புகள் எதிர்வரும் 22, 23 மற்றும் 24 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளன. (ஏ-இ)

# அநுராதபுரத்தைப் பாதுகாப்பதற்காக யுனஸ்கோவுக்கு பிரதமர் பாராட்டு

கொழும்பு, ஏப்.4

உலக மரபுரிமைச் சொத்தான அநுராதபுரம் புனித நகரத்தைப் பாதுகாப்பதற்கான யுனெஸ்கோவின் தலையீடு பாராட்டுதற்குரியது என்று பிரான்ஸில் இடம்பெற்ற யுனெஸ்கோ சர்வதேச மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பிரான்ஸிலுள்ள யுனெஸ்கோ தலைமையகத்தில் 'இலங்கையின் உலக மரபுரிமைச் சொத்தான அநுராதபுரம் புனித நகரத்தைப் பாதுகாப்பதற்கான ஒன்றிணைந்த மற்றும் நிலையான அணுகுமுறை' என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற சர்வதேச நிபுணர்களின் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எமது அரசு இனவாதத்தைப் புறக்கணிக்கிறது. அனைவருக்கும் சமமான உரிமைகளுடன் அனைவரையும் ஒன்றிணைக்கும் சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கே அரசாங்கம் முயற்சிக்கிறது. எதிர்காலத்தில் இலங்கையின் அநுராதபுரம், யாழ்ப்பாணம் மற்றும் கண்டி ஆகிய 3 நகரங்களையும் தேசிய கலாசார நகரங்களாக அபிவிருத்தி செய்வதற்கு எமது அரசு திட்டமிட்டுள்ளது என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார். (ஏ-இ)



# தட்டுப்பாட்டைத் தவிர்ப்பதற்கு அரிசி இறக்குமதி

கொழும்பு, ஏப்.4

தட்டுப்பாடு இல்லாது நுகர்வோருக்கு அரிசி கிடைப்பதை உறுதிசெய்ய அரிசியை மீண்டும் இறக்குமதிசெய்ய வேண்டும் என்று உணவுக்கொள்கை மற்றும் பாதுகாப்புக்குழு பரிந்துரைத்துள்ளது.

மழை காரணமாக எதிர்பார்க்கப்பட்ட அறுவடை கணிசமாகக் குறைந்துள்ளமை உணவுக்கொள்கை மற்றும் பாதுகாப்புக்குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. போதுமான அளவு அரிசி இருப்புகளைப் பராமரிக்க அரிசியை இறக்குமதி செய்வதில் அமைச்சரவை கவனம் செலுத்துவது தொடர்பாகவும் இதில் கலந்துரையாடப்பட்டது.

கால்நடை உற்பத்தித் துறையில் கால்நடைத் தீவனத்தேவைகளுக்காக உடைந்த அரிசியை இறக்குமதி செய்வது மற்றும் மாற்றுத் தீவனத்தைப் பயன்படுத்துவது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (ஏ-இ)

## ஜனாதிபதி நிதியத்தில்

# நிதிபெற்ற எம்.பி.கள் விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஏப்.4

2008 மற்றும் 2024ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ஜனாதிபதி நிதியில் இருந்து பெறப்பட்ட நிதி தொடர்பாக 22 முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள்மீது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நிதி மற்றும் வணிகக் குற்றப் புலனாய்வுப் பிரிவு இந்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பாக 22 கோப்புகள் தற்போது ஆய்வுசெய்யப்படுகின்றன. முதற்கட்ட விசாரணைகளில் 22 முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களால் பல்வேறு தொகைகளில் 100 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதி பெறப்பட்டுள்ளது என்று தெரியவந்துள்ளது.

பணத்தைப் பெறுவதில் முறைகேடுகள் நடந்ததா என்பது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. (ஏ-சி)

# அஸ்வெசும அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 4

அஸ்வெசும கொடுப்பனவை அதிகரிப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். அஸ்வெசும கொடுப்பனவை அதிகரிக்கும் தீர்மான நகல் நாடாளுமன்ற அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் கிடைத்ததும் அஸ்வெசும பயனாளிகளுக்கு அதிகரித்த கொடுப்பனவு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-6)

# பௌத்த நாட்டிலேயே பௌத்தத்துக்கு அநீதி

## கூறுகிறார் ரத்வத்த



கொழும்பு, ஏப்.4

இலங்கையென்பது பௌத்த நாடாகும். ஆனாலும் யாழ்ப்பாணத்திலுள்ள விகாரையொன்றில் தேரர்களுக்குத் தானம்கூட வழங்கமுடியாத நிலையே காணப்படுகின்றது. இப்படியான செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது என்று இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தலதாமாளிகையில் நிகழ்வொன்றை நடத்துவதற்கு அரசாங்கம் தயாராகிவருகின்றது. ஆனால் புலிகளும், ஜே.வி.பியினருமே தலதாமாளிகைமீது தாக்குதல் நடத்தினர். எனவே, நிகழ்வை நடத்துவதற்கு முன்னர் மகாநாயக்க தேரர்கள் முன்னிலையில் மண்டியிட்டு மன்னிப்புக்கோரவேண்டும்.

திருகோணமலையில் பொலிஸ் அதிகாரிகள்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இப்படியான சம்பவங்களுக்கு இடமளிக்கமுடியாது- என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகபாம்பு தீண்டி குருக்கள் மரணம்

யாழ்ப்பாணம், ஏப். 4
குருக்கள் ஒருவர் நாக பாம்பை கைகளால் பிடித்த போது அந்த பாம்பு தீண்டி உயிரிழந்துள்ளார். புத்தூர், சிவன்கோவில் வீதியை சேர்ந்த கணேசக்குருக்கள் கௌரிதாசன் (வயது-34) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
குறித்த குருக்கள் அராலி பகுதியில் உள்ள வாலையம்மன் கோவிலில் பூஜைசெய்து வந்துள்ளார். கடந்த 31ஆம் திகதி இரவு பூஜையை முடித்துவிட்டு கோவிலுக்கு அருகேயுள்ள வீட்டுக்குச் சென்று முற்றத்தில் இருந்துள்ளார். இதன்போதே அங்கு வலையில் சிக்கியிருந்த நாக பாம்பை அவதானித்து கைகளால் பிடித்துள்ளார்.
இந்தநிலையில் வீட்டில் உள்ளவர்களை அழைத்து போத்தல் ஒன்றினை வாங்கி பாம்மை போத்தலினுள்ளே விட்டுவிட்டு, தன்னை பாம்பு தீண்டிய விடயத்தைக் கூறியுள்ளார். இருப்பினும் அவர்களின் வற்புறுத்தலால் முதலாம் திகதி அதிகாலை ஒரு மணியளவில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும், சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-27-26)

பருத்தித்துறை

# பொதுச்சந்தைக்குப் பூட்டு: வியாபாரிகள் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 4
பருத்தித்துறை நகரின் மத்தியில் அமைக்கப்பட்ட கட்டடத்தில் இது வரை இயங்கிவந்த பொதுச் சந்தை நகரசபையால் நேற்றுப் பூட்டுப்போடப்பட்டு மூடப்பட்டது.
மரக்கறிச் சந்தைக்காக புதிய கட்டடத் தொகுதியொன்று அமைக்கப்பட்டுள்ள நிலையில், அந்தக் கட்டடத் தொகுதியில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டே பழைய சந்தை பூட்டுப்போட்டு மூடப்பட்டுள்ளது.
இடநெருக்கடி உள்ளிட்ட பல காரணங்களை முன்வைத்து வியாபாரிகள் புதிய கட்டடத்துக்குச் செல்வதற்கு மறுத்து வருகின்றனர். இந்த நிலையில் தற்போதைய நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் வியாபாரிகள் நேற்றையதினம் தமது வர்த்தக நடவடிக்கைகளைப் புறக்கணித்தனர்.
புதிய மரக்கறி சந்தை பருத்தித்துறை முதலாம் குறுக்குத் தெருவில் அமைக்கப்பட்டுள்ளது. குறித்த வீதி ஒரு ஒருவழிப்பாதை என்பதுடன் அவ்வீதியில் மீன்சந்தைக்கு செல்கின்றபோது போக்குவரத்து நெரிசல் காணப்படுவதுடன், வாகனத் தரிப்பிட வசதிகள் இல்லை எனவும் பொருள்களை இறக்கி ஏற்றுவது பாரிய இடர்பாடுகள் உள்ளதாகவும் வியாபாரிகள் மேலும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
(ம-100-27)

# பொலிஸாருக்கு இடையூறு; பெண் உட்பட அறுவர் கைது

திருகோணமலை, ஏப்.4
திருகோணமலை நிலாவெளிப் பொலிஸ் பிரிவில் சீருடை அணிந்த பொலிஸ் அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் பெண் உட்பட ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கடந்த 31ஆம் திகதி நடந்த இந்தச் சம்பவம் தொடர்பான காணொலி சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டிருந்தது.
இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்த நிலாவெளிப் பொலிஸ் நிலையப் பொலிஸார் அன்றையதினமே பிரதான சந்தேகநபரைக் கைதுசெய்தனர்.
இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஏனையோர் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றிருந்த நிலையில், அவர்களும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அடம்போடைப் பகுதியில் தலைக்கவசம் அணியாது, அதிக சத்தம் எழுப்பியவாறு மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களை வீதிப்போக்குவரத்துப் பொலிஸார் கைது செய்ய முயன்றபோது, இளைஞர் குழுவொன்று அதைத் தடுத்தது. பொலிஸாரை அருகில் உள்ள வீடொன்றுக்குள் இழுத்துச் சென்று அந்த இளைஞர் குழு அடைத்ததுடன், பொலிஸாரின் கைபேசியையும் சேதப்படுத்தியிருந்தது. (எ-இ)

சட்டவிரோத அகழ்வில் ஈடுபட்ட

# டிப்பரை விடுவிப்பதற்காக தலையிட்ட பிரதேசசெயலர்

## ஆளுநரின் கூட்டத்தில் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 4
வவுனியாவில் சட்டவிரோத கிரவல் அகழ்வுடன் தொடர்புடைய டிப்பர் வாகனம் ஒன்று பொலிஸாரால் அண்மையில் கைப்பற்றப்பட்ட நிலையில், பிரதேசசெயலர் ஒருவர் அதனை விடுவிக்க தலையீடு செய்துள்ளார் என்று ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளது.
வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை வினைத்திறனாகவும், ஒருங்கிணைந்தும், விரைவாகவும் செலவு செய்வது தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும், கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெகதீஸ்வரன், திலகநாதன் ஆகியோருக்கும், வடக்கு மாகாண பிரதம செயலாளர் தலைமையிலான மாகாண திணைக்களத் தலைவர்களுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.
வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை செலவு செய்வதில் உள்ள பிரச்சினைகள், முன்னுரிமைகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.
இதன்போது கருத்து தெரிவித்த பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, வவுனியாவில் சட்டவிரோத கிரவல் அகழ்வுடன் தொடர்புடைய டிப்பர் வாகனம் ஒன்று பொலிஸாரால் அண்மையில் கைப்பற்றப்பட்ட நிலையில் பிரதேசசெயலர் ஒருவர் அதனை விடுவிக்க தலையீடு செய்திருந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார்.
இதன்போது, சட்டவிரோத மணல், கிரவல், கல் அகழ்வு நடவடிக்கைகளுடன் பொலிஸாருக்கு மாத்திரமல்ல அதிகாரிகளுக்கும் தொடர்பு இருக்கின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் ஏற்றுக்கொண்டார். (ம-110)

# தாதிய உத்தியோகத்தர் விபத்தில் சிக்கி மரணம்!

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமை புரியும் பெண்ணொருவர் விபத்தில் சிக்கிய நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.
வட்டுத் தெற்கு, சித்தங்கேணி பகுதியைச் சேர்ந்த ரவீந்திரன் கிருஷ்ணவேணி (வயது-52) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
கடந்த மாதம் 26ஆம் திகதி இரவுக் கடமைக்காக அவர் மோட்டார்சைக்கிளில் மருத்துவமனைக்குச் சென்றுள்ளார். இதன்போது அராலி நோக்கி வந்துகொண்டிருந்த மோட்டார்சைக்கிள், விளான் சந்தி பகுதியில் அவரது மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்து சம்பவித்துள்ளது.
படுகாயமடைந்த குறித்த தாதி தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்ப்பிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இருப்பினும் சிகிச்சையின் போது நேற்று உயிரிழந்துள்ளார்.
இறப்பு விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-27-26)

உ
சிவமயம்
அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு
கடந்த (06.03.2025) அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவி
அமரர் தர்மசிறீராஜா தர்மபதி
(ஓய்வு நிலை ஆசிரியை, பகுதித்தலைவர்,
யா/தேவரையாளி இந்துக்கல்லூரி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 03.04.2025 நேற்று வியாழக்கிழமை காலை 09.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து நாளை 05.04.2025 சனிக்கிழமை பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் சபிண்டீகரண கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.
"தர்ம வாசா"
வதிரி, கரவெட்டி.
குடும்பத்தினர்.
+94 75 650 6799
+65 9423 5760
+44 782 515 2591

# பெண் மீது தாக்குதல்: சந்தேகநபர் கைதானார்

யாழ்ப்பாணம், ஏப். 4
ஒட்டுசுட்டானில் பெண்ணொருவரைக் கொடூரமாகத் தாக்கிய சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சின்னசாளம்பன் பகுதியில், பெண்ணொருவர் மீது வீதியில் வைத்து காட்டுமிராண்டித் தனமாகத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. இது தொடர்பான வீடியோக்கள் இணையத்தளத்தில் பரவின.
விசாரணையின்போது, மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நிறுவனமொன்றில் பணியாற்றும் இரு பெண்களுக்கிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டையடுத்து, பெண்ணொருவரின் கணவர், மற்றைய பெண்ணை தாக்கியமை தெரியவந்தது. பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதை அறிந்த சந்தேகநபர் தலைமறைவாகியிருந்தார். எனினும், தொடர்ச்சியாக தேடுதல்களைத் தொடர்ந்து நேற்று அவர் கைது செய்யப்பட்டார்.
(ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிராகரித்த...

உள்ளூராட்சித் தேர்தலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களில், தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, சுயேச்சைகள் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆகியவற்றின் பல வேட்புமனுக்கள் வடக்கு, கிழக்கில் நிராகரிக்கப்பட்டிருந்தன. இதற்கெதிராக மேற்படி தரப்புகள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தன.

இந்த வழக்குகள் மீதான விசாரணைகள் நேற்றுத் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டன. நேற்றைய நகர்வுகள் மற்றும் வழக்கின் செல்நெறிகளின் அடிப்படையிலேயே, பெரும்பாலும் அனைத்து வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட சாத்தியங்கள் உள்ளதாக சட்டவல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தென்னிலங்கையில் நிராகரிக்கப்பட்ட வேட்புமனு ஒன்று தொடர்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசாரணையின்போது, 'ஒருவருடைய பிறப்பின்போது மருத்துவமனையில் வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழை ஆதாரமாக ஏற்க மறுத்திருந்தால், அவற்றை உரிய ஆதாரமாக ஏற்றுக்கொள்ளலாம்' என்று நீதிமன்றம் அறிவுறுத்தியிருந்தது. இதனால், வடக்கு - கிழக்கில் நிராகரிக்கப்பட்ட ஏராளமான வேட்புமனுக்கள் தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டிருந்தது. இவ்வாறான பின்னணியிலேயே, வழக்கின் தீர்ப்பு இன்று வெளிவரவுள்ளது.

இந்த வழக்குகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் நிசாம் காரியப்பர், தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பில் ஜெப்ரி அழகரத்தினம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி கு.குருபரன் ஆகியோர் முன்னிலையாகினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## புலமைப்பரிசில்...

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான விண்ணப்பங்களை இன்று வெள்ளிக்கிழமை முதல் 30ஆம் திகதி நள்ளிரவு 12 வரை இணையவழி ஊடாக விண்ணப்பிக்கமுடியும். அதற்கமைய, எக்காரணம் கொண்டும் விண்ணப்பங்களைப் பெறுவதற்காக வழங்கப்பட்ட கால அவகாசம் நீடிக்கப்படாது - என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் மேலும் கூறியுள்ளார். (அ-ம-இ)

## அரசின்...

தையிட்டி திஸ்ஸ விகாரை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள காணிகளின் உரிமையாளர்கள், சர்வமதத் தலைவர்கள், சிவில் அமைப்புகள் ஆகிய தரப்பினரை ஒன்றிணைத்து, ஆரியகுளம் நாகவிகாரையில் இந்தக் கலந்துரையாடல் நடத்தப்பட்டிருந்தது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட காணிகளின் உரிமையாளர்கள் ஊடகங்களிடம் தெரிவித்ததாவது:

தையிட்டி திஸ்ஸ விகாரை பொதுமக்களின் காணிகளை ஆக்கிரமித்தே அமைக்கப்பட்டுள்ளது. இதை அமைச்சர்களும், அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களும் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டிருந்தனர். ஆதலால், எமக்கு விரைவில் நல்லதொரு தீர்ப்பைத் தருவதாகவும் அவர்கள் கூறியிருந்தனர். இது தொடர்பிலேயே இன்று இங்கு (நேற்று நாகவிகாரையில்) இந்தக் கலந்துரையாடல் நடத்தப்பட்டிருந்தது. நீதியமைச்சரும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தார்.

எமக்கு நீதியமைச்சர் மூலம் நல்லதொரு தீர்வு வழங்கப்படும் என்று கூறினார்கள். ஆனால், வெறும் பதினைந்து நிமிடங்களில் நீதியமைச்சர் உரையாற்றிவிட்டுப் புறப்பட்டுவிட்டார். தேர்தல் காலம் என்பதால், இந்த விடயம் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடமுடியாது என்றவாறாகக் கூறியிருந்தனர். அப்படியெனில், தேர்தல் காலம் என்று தெரிந்தும் இந்தக் கலந்துரையாடல் ஏன் ஒழுங்கமைக்கப்பட்டது என்ற கேள்வி எழுகின்றது.

உண்மையில் எங்களுக்கு உரையாற்றுவதற்குரிய வாய்ப்புகள்கூட மறுக்கப்பட்டன. மிகவும் சிரமப்பட்டே எமது கருத்துகளை முன்வைக்கவேண்டியிருந்தது. இந்தக் கலந்துரையாடல்களில் ஏமாற்றம்தான் எஞ்சியுள்ளது. ஆனால், எமது காணிகள் எமக்குத் தேவையென்பதால், வாக்குறுதி வழங்கும் அனைவரையும் நம்புவதைத்தவிர எமக்கு வேறு வழிகளும் இல்லை - என்றார். (அ-ம-125-26)

## தீர்வு தர...

இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் பௌத்த அமைப்பைச் சேர்ந்த நால்வரும் கலந்துகொண்டனர். அவர்கள், '1956ஆம் ஆண்டுக்கு முன்னர் இங்கே சிங்கள மக்கள் வாழ்ந்தனர். சிங்கள மக்களுக்கு இங்கு காணிகள் இருந்துள்ளன. அவர்கள் மீண்டும் தற்போது வடக்கில் வாழக்கேட்கின்றனர். தமிழர்கள் தெற்கில் வாழ்ந்தால், ஏன் சிங்கள மக்கள் யாழ்ப்பாணத்தில் வாழமுடியாது?' என்று கேள்வி எழுப்பினார்கள்.

இதற்கு, 'தமிழர்கள் தெற்கிலும் வாழலாம், சிங்களவர்கள் யாழ்ப்பாணத்திலும் வாழலாம். ஆனால், நாங்கள் உங்கள் வீடுகளுக்குள்ளும், நீங்கள் எங்களின் வீடுகளுக்குள்ளும் வாழமுடியாது. திஸ்ஸ விகாரை விவகாரம் அவ்வாறான ஒன்றுதான். எனவே, விடயத்தைத் திரிவுபடுத்தவேண்டாம்' என்று திஸ்ஸ விகாரைக்காக காணிகளை இழந்தவர்கள் பதிலடி கொடுத்துள்ளனர். இதன்பின்னர், திஸ்ஸ விகாரைப் பகுதியில் தமக்குக் காணிகள் உள்ளன என்றும், வேண்டுமானால், நீதிமன்றத்தில் வழக்குத் தொடருமாறும் அந்த சிங்கள அமைப்பு தர்க்கம் புரிந்துள்ளது. அந்த அமைப்பினரே நேற்றைய கலந்துரையாடலைக் குழப்பியடித்தனர் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (அ-ம-125)

## தொடர்புடைய...

பிரதானிகளின் பிரசன்னம் பொருத்தமானதாக இருந்தாலும், திணைக்களங்கள் எவையும் அழைக்கப்படாமலும், இன்னும் சில திணைக்களங்களுக்குத் தெரியாமலும்தான் இந்தக் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறைந்தபட்சம் மாவட்டச் செயலரையும்கூட அழைக்காமலேயே இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## தேர்தல்...

படும் தீர்மானங்களைக் கவனத்திற்கொள்ளப்போவதில்லை என்று இலங்கையின் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

இலங்கையிடம் இருந்து கச்சதீவை மீட்கவேண்டும் என்று தமிழக சட்டசபையில் நேற்றுமுன்தினம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானம் தொடர்பில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் சந்திரசேகர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழகத்தில் தேர்தல் நெருங்கும் காலங்களில் கச்சத்தீவுப் பிரச்சினையும் களத்துக்கு வரும். தேர்தல் பரப்புரையின்போது அது பேசுபொருளாகவும் மாறும். கருணாநிதி, எம்.ஜி.ஆர், ஜெயலலிதா காலம் முதலே இப்படிதான் நடந்துவருகின்றது. எனவே, தமிழகத்தின் தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் மட்டும் இதற்கு விதிவிலக்கல்லர்.

கச்சதீவென்பது இலங்கைக்குச் சொந்தமானது. சர்வதேசத்தால் அது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் நியமங்களும்கூட கச்சதீவு இலங்கைக்குச் சொந்தம் என்றே கூறுகின்றன. ஆதலால், தேர்தலுக்காக கச்சதீவுப் பிரச்சினையை வைத்து விளையாடலாம். வாக்குகளை அதிகரித்துக்கொள்ளலாம். ஆனால் கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது என்பதே இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடாகும் என்றார். (அ-ம-26-44)

## தீர்வு...

கலந்துரையாடலில் பங்கேற்றுவிட்டு பின்கதவால் ஓட்டமெடுத்துள்ளார்.

கூட்டத்தில் இருந்து முதலாவது ஆளாக வெளியேறிய நீதியமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் கருத்துகளைக் கேட்பதற்கு முற்பட்டுள்ளனர். எனினும், அவர் ஊடகங்களை எதிர்கொள்வதைப் புறக்கணித்துவிட்டு விரைந்து சென்றார். (அ-ம-125)

## வவுனியாவில்...

வவுனியாவில் 15 கிலோ கஞ்சா விசேட அதிரடிப்படையால் கைப்பற்றப்பட்டதுடன், அவற்றைக் கடத்திய குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசியத்தகவலையடுத்து வவுனியா கணேசபுரம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இந்தக் கடத்தல் முறியடிக்கப்பட்டது. சந்தேகநபர்கள் மூவரும் நெளுக்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ-ம-110-18)

## 13ஐ...

சர் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியப் பிரதமர் மோடி பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காகவே இலங்கைக்கு வருகின்றார். அவருடைய வருகை மீனவர்களின் பிரச்சினையை மையப்படுத்தியது அல்ல. அதேநேரம், 13ஆவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டதுமல்ல. ஆதலால், சில தரப்பினர் இந்த விடயங்களுக்காகவே பிரதமர் மோடி வருகின்றார் என்றுகூறி சுயதிருப்தியடைந்து வருகின்றனர் - என்றார். (அ-ம-26-44)

## இலங்கையுடனான...

குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். இலங்கைக்கான தனது பயணத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள பதிவிலேயே, 'இலங்கையுடனான இந்தியாவின் உறவு ஆழமானது. அந்த உறவை மேலும் வலுப்படுத்த ஆர்வத்துடன் உள்ளேன்' என்று கூறியுள்ளார்.

'இலங்கை ஜனாதிபதியின் இந்தியப் பயணம் வெற்றியடைந்ததன் தொடர்ச்சியாகவே, நான் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்கின்றேன். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான ஒப்பந்தங்கள் தொடர்பிலும், அவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பிலும் நாங்கள் கவனத்திற்கொள்வோம்' என்றும் மோடி தெரிவித்துள்ளார்.

தாய்லாந்தில் இன்று பிம்ஸ்டெக் மாநாடு நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக பிரதமர் மோடி தற்போது தாய்லாந்துக்குச் சென்றுள்ளார். அங்கிருந்தே அவர் இலங்கைக்கு வரவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## பரந்தன்...

காணிகளில் 15 ஏக்கர் பரப்பளவான காணிகள் நேற்று முறைப்படி விடுவிக்கப்பட்டுள்ளன.

காணி விடுவிப்புத் தொடர்பான ஆவணங்கள், கண்டாவளைப் பிரதேச செயலாளர் த.பிருந்தாகரனிடம் 553ஆவது படைப்பிரிவின் நிர்வாக அதிகாரியால் கையளிக்கப்பட்டன. (அ-ம-113)

## அமெரிக்காவின்...

மான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் ஜனாதிபதி அநுரவால் தனிக்குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சின் செயலாளர், மத்திய வங்கியின் ஆளுநர், இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர், வெளிவிவகார அமைச்சின் பொருளாதார விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகம், ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர், இலங்கை வர்த்தக சபையின் பிரதான பொருளாதாரக் கொள்கை ஆலோசகர்கள் ஆகியோர் இந்தக் குழுவில் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

அமெரிக்காவின் வரிவிதிப்புத் தொடர்பில் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்ததாவது:-

இலங்கையை மட்டும் இலக்குவைத்து அமெரிக்கா வரி விதிக்கவில்லை. தாம் கொடுக்கல், வாங்கல்களில் ஈடுபடும் அத்தனை நாடுகளுக்குமே இந்த பரஸ்பர வரி விதிக்கப்பட்டுள்ளது. இது பொதுக் கொள்கையாகும்.

அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு இலங்கையில் 88 சதவீத வரி விதிக்கப்படுகின்றது என அமெரிக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். எனவேதான் இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு 44 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது. ஏனைய நாடுகளுக்கும் இதே அணுகுமுறைதான் கடைபிடிக்கப்பட்டுள்ளது. பூகம்பத்தால் பாதிக்கப்பட்டுள்ள மியன்மாருக்கும் 44 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது.

எனவே, 'இலங்கைக்கு மட்டுமே இவ்வாறு வரி விதிக்கப்பட்டுள்ளது. இதனை தடுப்பதற்கு தலையீடு செய்யப்படவில்லை' எனப் பரப்படும் தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லை. வரி விதிப்பதற்கு முன்பே சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் பேச்சு நடத்தினோம். அவ்வாறு நடந்தால் கடைபிடிக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் ஆராய்ந்தோம். அமெரிக்காவின் கொள்கையை எம்மால் மாற்றமுடியாது. வரி விதிப்பு ஏப்ரல் 9ஆம் திகதியே அமுலுக்குவரும். எனவே, பேச்சுவார்த்தை மூலம் வரி வீதத்தை குறைத்துக்கொள்வதற்குரிய சாத்தியப்பாடுகள் பற்றி முயற்சிப்போம் - என்றார். (அ-ம-சி-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை...

கொள்கையை அதிபர் ட்ரம்ப் மறுபரிசீலனைக்கு உட்படுத்தியுள்ளார். இதனால், உலக நாடுகள் அனைத்துக்கும் அவர் புதிய வரிவிதிப்பை அறிவித்துவரும் நிலையிலேயே, இலங்கைக்கு 44 வீத வரிகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்த வரி விதிப்பை இல்லாமற் செய்வதற்கு, அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. (அ-ம-சி)

## பெறப்பட்டன...

இதுவரை பல்வேறு பேச்சுவார்த்தைகள் மற்றும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்தாலும், காணி உரிமையாளர்களிடம் இருந்து ஆவணங்கள் இதுவரை பெறப்பட்டதில்லை. இவ்வாறிருக்கையில், நேற்றையதினம் உரிய ஆவணங்களை (உறுதி, தோம்பு) நீதியமைச்சின் அதிகாரிகள் பெற்றுச் சென்றுள்ளனர். அதுபோல், திஸ்ஸ விகாரை நிர்வாகத்திடம் இருந்தும் ஆவணங்கள் பெறப்பட்டன. அவற்றின் உண்மைத்தன்மை தொடர்பிலும், அவை மீதான அடுத்த கட்ட நகர்வுகள் தொடர்பிலும் விரைவில் நடவடிக்கை இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-125-26)

## யோகசுவாமிகள் குருபூசை தினம்

யாழ்ப்பாணம், ஏப்.4

அருள்மிகு சித்தர் யோகசுவாமிகளின் குருபூசை தினம், யாழ். சிவதொண்டன் நிலையத்துப் புராண மண்டபத்தில் எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது. யோகசுவாமிகளின் திருமேனிக்குத் திவ்யமான அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பட்டு, நண்பகல் மகேஸ்வர பூஜை இடம்பெறும்.

அதனை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமையும், நாளை சனிக்கிழமையும், 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் என குருபூசைக்கு முந்திய மூன்று நாள்களும் வழமைபோல் ஆச்சிரம வாழ்வு நாள்களாக அனுஷ்டிக்கப்படும். இந்த நாள்களில் நற்சிந்தனை ஓதப்படும். (ச-25)

**NEC**
யாழ் நகர், பெருமாள் கோவில் அருகாமை
**A/L 2027**
ஆரம்பம் :- 06.04.2025 ஞாயிறு
காலை 09 மணி
கலை & வர்த்தகம்
புதிய பிரிவு
அனுமதியை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்
தொடர்புகளுக்கு : 0765350999

நாளை ஆரம்பம்
**A/L - 2027**
கலை வர்த்தகம்
காலை: 9.00 மணி
DMI யாழ்நகர் T.P.:077 848 0604

**A/L-2027 பௌதிகவியல்**
தமிழ், ஆங்கில மொழிமூலம்
M.கருணாநிதி B.Sc(Spl),PGDE
Science Pearl - Jaffna
Physics World - Nallur / Ariyala
T.P: 077 618 3064

**Rooms வாடகைக்கு**
K.K.S Road யாழ்ப்பாணம், யாழ் இந்துக் கல்லூரிக்கு 200m தூரத்தில் Rooms வாடகைக்கு உண்டு.
077 986 2572

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் வடமராட்சி அல்வாய் கிழக்கில் 38 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் இருவழி பாதையுடன்
- 1 பரப்பின் விலை
- ✓ பிரதான வீதி முகப்புடன் பதினேழு லட்சம் ரூபா (17,000.00)
- ✓ இரண்டாம் காணி பதினைந்து லட்சம் ரூபா (15,000.00)
- ✓ பின் பகுதி காணி எட்டு லட்சம் ரூபா (8,000.00)
- நெல்லியடி பஸ்நிலையம் 2 1/2 KM, பருத்தித்துறை பஸ் நிலையம் 2 KM, மந்திகை ஆஸ்பத்திரி 1 KM பருத்தித்துறை வீதி 600M, மாலு சந்தி 1 KM தூரம்
- தம்பசெட்டி மெதடிஸ்த மிசன் வித்தியாலயம் 1 KM தூரம், மாலுசந்தி பிள்ளையார் கோயில் 1 KM தூரம்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி, செம்மண் தரை நன்னீர் ஊற்று
- தரகர் தேவையில்லை

(பார்வையிடும் நேரம் காலை 8.00 - மாலை 6.00 வரை)
தொடர்பு: 076 860 2770, 076 987 8617, 076 935 3971

**வேலை ஆள் தேவை**
ஆண், 20 வயது தொடக்கம் 50 வயது வரை.
இரண்டு பேர் தேவை.
கணக்காளர் - யாழ். மாநகர சபைக்கு உட்பட்டவர் விரும்பத்தக்கது.
விபரங்களுக்கு: 077 468 3354
(CS 2890) A

# மரண அறிவித்தல்



## கைலாசபிள்ளை தர்மரட்ணம்

(முன்னாள் உரிமையாளர் சுதுமலை மாப்பியன் மில்)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், சம்பியன் லேன் கொக்குவில் தற்போது லண்டனை வதிவிடமாகவும் கொண்ட கைலாசபிள்ளை தர்மரட்ணம் அவர்கள் கடந்த 27.03.2025 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை (மாப்பியன் மில் ஸ்தாபகர்) - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா (ராஜா அரிசி ஆலை கொக்குவில்) - அன்னப்பிள்ளை தம்பதியரின் மூத்த மருமகனும், புவனராணி அவர்களின் அன்புக் கணவரும், ரகுராஜ், ஜெயராஜ், நிமல்ராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், புனிதா அவர்களின் அன்பு மாமனாரும், ரக்ஷன், ஆர்த்தி ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற யோகரட்ணம் மற்றும் அமிர்தரட்ணம் காலஞ்சென்ற ஞானரட்ணம் மற்றும் பஞ்சரட்ணம், சுகிர்தரட்ணம் காலஞ்சென்ற விஜயரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கமலா, விக்னராஜா, ரஞ்சிதம், லீலாவதி காலஞ்சென்ற சாந்தாவதி மற்றும் லலிதா, செல்வரட்ணம், பத்மினி, கேதீஸ்வரன், ஜெகதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (06.04.2025) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 16.09.1937 — மறைவு 27.03.2025

தகவல்:
பஞ்சரட்ணம் (சகோதரர்)

(CS/57905) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111
மின்னஞ்சல் : news@uthayan.com
மின்னஞ்சல்: advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org